செ.வெ.எண். 50 நாள்: 21.08.2019

**கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் ஒன்றியம் அழகியபுதுார் மற்றும் பெருகோபனபள்ளி ஏரிகளில், குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ. 10 லட்சம் மதிப்பில் துார்வாரும் பணிகளை, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் இன்று (21.08.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் ஒன்றியம் ரூ. 5- லட்சம் மதிப்பில் பாலிநாயனப்பள்ளி ஊராட்சி அழகியபுதுார் ஏரியும், ரூ. 5 ___ லட்சம் மதிப்பில், பெருகோப்பனப்பள்ளி லட்சுமி நாயக்கன் ஏரியில், குடிமராமத்து திட்டத்தின் கீழ் துார்வாரும் பணிகள் மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட புதுப்பேட்டை ஸ்ரீ வீரஆஞ்சநேய திருக்கோயில் அருகில் உள்ள குளம் துார் வாரும் பணி மேற்கொள்வது குறித்தும், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் இன்று (21.08.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கும் போது:**

பர்கூர் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி துறை கண்காணிப்பில் 165 ஏரிகள் உள்ளது. தாய் திட்டத்தின் கீழ் 8- ஏரிகளும், தனியார் பங்களிப்புடன் 4- ஏரிகளும் துார் வாரப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது குடி மராமத்து திட்டத்தின் கீழ் 12- ஏரிகள் துார் வாரும் பணிகள் துவக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பாலிநாயனப்பள்ளி ஊராட்சிகுட்பட்ட அழகியபுதுார் ஏரி, பெலவர்த்தி, வரட்டணப்பள்ளி, பெருகோபனப்பள்ளியில் லட்சுமனநாயக்கன் ஏரியும், காட்டரகம் ஊராட்சியில் சந்துார் ஏரியும், குள்ளம்பட்டி ஊராட்சியில் ஆதிதிராவிடர் குட்டை, லட்சுமி கவுண்டன் ஏரி, மாதிநாயக்கன்பட்டி ஏரி, கிட்டனுார், சிகரலப்பள்ளியில் கப்பல்வாடி ஏரி, வெப்பாலம்பட்டி ஊராட்சி தொப்பிடிகுப்பம் ஏரி, தொகரப்பள்ளி ஊராட்சி பில்லகொட்டாய் ஏரி, அஞ்சூர் ஊராட்சி மோடிகுப்பம் ஏரி ஆகிய ஏரிகளில் தலா ரூ. 5 லட்சம் மதிப்பில் துார்வாரும் பணிகள் துவக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேப்போல பர்கூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் 33- குளம் குட்டைகள், தலா ரூ. 1 ___ லட்சம் வீதம் ரூ. 33 ___ லட்சம் மதிப்பில் துார்வாரும் பணிகள் மேற்கொள்ளபட்டு வருகிறது. வருவாய்த் துறை, நிலஅளவை துறை, மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக ஏரிகளை அளவீடு செய்து ஆக்கிரமிப்புகள் செய்துள்ளவர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் பகுதியில் ஏரியில் துார் வாரும் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து பெருக்கோப்பனபள்ளியில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். அப்போது பொதுமக்கள் பகுதி நேர நியாய விலைகடை, வீட்டுமனை பட்டா, வேண்டி கோரிக்கை வைத்தனர். சம்மந்தப்பட்ட துறை சார்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ராமசந்திரன், திரு.பையாஸ்அகமது, ஒன்றிய பொறியாளர் திருகோவிந்தராஜ், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் (பொ) திரு.சுசில்தாமஸ், சுகாதார ஆய்வாளர் திரு.மோகனசுந்தரம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.மோகன் வருவாய் ஆய்வாளர் திரு. எம். செந்தில்நாதன், கிராம நிர்வாக அலுவலர் திரு.சம்சுதீன், மற்றும் விவசாய பெருமக்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.